**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No. **287/2017** |
| Deposition of witness | | PW-6/LW-10 |
| Name | | மருத்துவர் லெட்சுமி |
| Father's/Husband Name | | கார்த்திக் |
| Village | | பட்டுக்கோட்டை |
| Taluk | | |
| Caste | | - |
| Calling | | - |
| Religion | | - |
| Age | | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 12th day of August 2024

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.12.2016 அன்று காலை 11.00 மணியளவில் நான் முழுநேர பணியில் இருந்த போது பாவாஜிக்கோட்டை கன்னியாக்குறிச்சியை சேர்ந்த செந்தில் என்ற செந்தில்குமாரி என்ற 29 வயது பெண்ணை தலைமை பெண் காவலர் குமாரி செலின் என்பவர் அழைத்து வந்தார். அவரை நான் பரிசோதனை செய்த போது அவருக்கு வெளிக்காயங்கள் எதுவும் இல்லை. அவருடைய பிறப்பு உறுப்பை பரிசோதனை செய்த போது பெண் உறுப்பு சவரம் செய்யப்பட்டிருந்தது. பெண் உறுப்பு சாதாரணமாக இருந்தது, கன்னித்திரை சவ்வு ஏற்கனவே கிழிந்திருந்தது. அவர் 7 வருடங்களாக உடல் உறவில் ஈடுபட்டதாக கூறினார். யாரும் தன்னை கட்டாயப்படுத்தவில்லை என்று

கூறினார். அவர் கர்ப்பமாக இருக்கிறாரா என்று பரிசோதனை செய்தபோது சிறுநீரக பரிசோதனையில் கர்ப்பம் இல்லை என்று தெரியவந்தது. அவரது வயிற்றினை ஸ்கேன் செய்து பார்த்தபோதும் கர்ப்பம் இல்லை என்று தெரியவந்தது. அவர் கன்னித்தன்மை அற்றவர் என நான் சான்று வழங்கினேன். நான் வழங்கிய சான்று **அசாஆ** 3 ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

செந்தில்குமாரியை பரிசோதனைக்கு என்னிடம் அழைத்து வரும் போது எழுத்துப்பூர்வமான வேண்டுகோள் கடிதம் என்னிடம் கொடுப்பார்கள் அதில் வழக்கு பற்றிய சுருக்கம் இருக்கும். பெண்கள் சைக்கிள் ஓட்டுவது போன்ற கடினமான காரியங்களை செய்யும் போது கன்னித்திரை கிழிவதற்கு வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல. பெண்கள் சுய இன்ப பழக்கம் செய்தால் கன்னித்திரை கிழிவதற்கு வாய்ப்புள்ளதா என்றால் உள்ளது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கினங்க நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/-க.சத்யா
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No. **287/2017** |
| Deposition of witness | | PW-7/LW-11 |
| Name | | மருத்துவர் சீனிவாசன் |
| Father's/Husband Name | | விஆர்.கே.பழனியப்பன் |
| Village | | பட்டுக்கோட்டை |
| Taluk | | |
| Caste | | - |
| Calling | | - |
| Religion | | - |
| Age | | 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 12th day of August 2024

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**<u>எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்.</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் இரத்த வங்கி மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் முதுநிலை மருத்துவராக இருந்த போது 08.12.2016 அன்று முழுநேர பணியில் இருந்த போது திருவாடணை பனஞ்சாவயல் கிராமத்தை சேர்ந்த நாகநாதன் மகன் பாலமுருகன் என்பவரை பெண் தலைமை காவலர் செலின் என்பவர் ஆண்மை குறைவு சோதனைக்காக என்னிடம் அழைத்து வந்தார். அவர் பரிசோதனையின் போது அவருடைய பிறப்பு உறுப்புகள் சாதாரணமாக இருந்தது. அவருடைய விந்தகத்திலும், விந்தக முதிர்ச்சி பகுதியிலும் எந்த நோய்க்கான அறிகுறியும் காணப்படவில்லை. அவரிடம் பால்வினை நோய்க்கான அறிகுறிகள் காணப்படவில்லை. அவரின் 2ம் நிலை

பாலின உறுப்புகள் அவருக்கு வயதிற்கு தகுந்தமாதிரி சீராக இருந்தது. அவருக்கு நரம்பு சம்மந்தமாக எந்தவித வியாதிகளும் காணப்படவில்லை. மேற்படி காரணங்களுக்காக அவருக்கு ஆண்மை அற்றவர் என்பதற்காக எந்தவித அறிகுறியும் இல்லை என்று சான்று அளித்தேன். நான் வழங்கிய சான்று **அசாஆ** 4 ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும், குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/-க.சத்யா
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.